**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.MCOP. 12 /2022**

**Deposition of P.W.1-** பால்பிள்ளை

**Dated:** 06.06.2025

<u>3வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் கேரளாவில் வசித்து வருகிறேன். மனுதாரர்கள் அனைவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். மனுதாரர்களில் 3 பேர் கேரளாவில் இருக்கிறோம். மனுதாரரில் ஒருவர் தக்கலையிலும், மற்றவர் அம்மாண்டிவிளையிலும் வசித்து வருகிறோம். டிசம்பர் 29, 2019ம் ஆண்டு இறந்துபோனார். காலை 04.00 மணிக்கு விபத்தில் இறந்து போனார். விபத்து இரவிபுதூர்கடை பெட்ரோல் பல்க் பக்கம் நடந்தது. எனது தந்தை இறக்கும் போது 73 வயது. பிரேத பரிசோதனை அறிக்கையில் 83 வயது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுவில் 65 வயது என குறிப்பிட்டுள்ளோம். விபத்தை நாங்கள் நேரடியாக பார்க்கவில்லை. விபத்தை யார் பார்த்தார்கள் என்றும், எந்த வாகனத்தால் விபத்து ஏற்பட்டது என்று எங்களுக்கு நேடியாகத் தெரியாது. நாங்கள் புகார் மனு கொடுக்கவில்லை. புகார் மனு யார் கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. கேளைா போக்குவரத்து கழக பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன். பேரூந்து எண் எனக்குத் தெரியாது. மனுவில் குறிப்பிட்டுள்ளப்படியும், முதல்விசாரணை சாம்டசிய்ததில் கூறியுள்ளப்படியும் வித்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இறந்து போன என் அப்பாவிற்கு வேலை கிடையாது என்றால் சரியல்ல. எனது அப்பாவை நாங்கள் கவனிக்காமல் தனியாக இருந்து வந்தார் என்றால் சரியல்ல. காலை 04.00 மணிக்கு விபத்து நடந்த இடத்திற்கு எனது அப்பா வரவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. கன்னியாகுமரி

மாவட்டத்தில் தங்கியுள்ள இரண்டு மனுதாரர்களின் வீட்டிலிருந்து 25 கி.மீ தொலைவில் விபத்து நடைபெற்றுள்ளது என்றால் சாமியார்மடத்திலுள்ள எனது அண்ணனின் குடும்ப வீட்டிற்கு போனார். குடும்ப வீட்டிற்கு சென்றதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஒரு வாரமாக தேடினோம் எனது அப்பா கிடைக்கவில்லை. நாங்கள் எங்களது தந்தையை முறையாக பராமரித்து வந்தால் விபத்தில் இறந்திருக்க மாட்டார் என்றால் சரியல்ல. இறந்துபோனவரை சார்ந்து நாங்கள் இல்லை என்றால் சரியல்ல. மனுவில் கோரியுள்ள படி இழப்பீடு பெற உரிமையில்லை என்றால் சரியல்ல.